தேதி 07.12.2024 நேரம் மாலை 6.10 மணி

**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – செங்கேணி பழனி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு ஒடிசாவில் 3 ரயில் பாதை திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டினார்.
- காசநோய் பாதிப்பு அதிகம் பகுதிகளில் 100 நாள் சிறப்பு இயக்கம் இன்று தொடங்கப்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

○ கொடி நாளை ஒட்டி, பாதுகாப்பு படையினர் மற்றும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாருக்கு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

- மத்திய அரசு 2025-க்குள் இந்தியாவில் காசநோய் இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என இலக்கு நிர்ணயித்துள்ளதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார்

<u>முர்மு (19)</u>

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு ஒடிசாவில் பாங்கிரிபோசி-கொருமாஹிசானி, புராமரா-சாக்குலியா, பதம்ஹர்-கெந்துஜர்கர் ஆகிய 3 ரயில் பாதை திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து, பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்-மேம்பாட்டு மையம், டான்ட்போஸ் விமான நிலையம், ஒடிசாவின் ராய்ரங்பூரில் உள்ள துணை பிரிவு மருத்துவமனையின் புதிய கட்டிடம் ஆகியவற்றுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார். நிகழ்ச்சியில் பேசிய குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, இந்த மண்ணின் மகள் என்பதில் தாம் எப்போதும் பெருமை கொள்வதாகவும், பொறுப்புகள், வேலை பளுமிக்க சூழல் போன்றவை

தம்மை பிறந்த இடத்தில் இருந்தும், மக்களிடத்தில் இருந்தும் ஒரு போதும் விலக்கவில்லை என்றும் தெரிவித்தார். ஒடிசா பகுதி மக்களின் தூய்மையான, ஆழமான பாசம் எப்போதும் தமது மனதில் எதிரொலிக்கிறது என்றும் குறிப்பிட்டார். ரயில் திட்டங்கள், விமான நிலையங்கள் இந்த பிராந்தியத்தில் போக்குவரத்தையும் வர்த்தகத்தையும் மேம்படுத்தும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். மேலும், 100 படுக்கை வசதிகளுடன் கூடிய புதிய மருத்துவமனை கட்டிடம் உள்ளூர் மக்களுக்கு சிறந்த சுகாதார வசதிகளை வழங்கும் என்று கூறினார். பழங்குடியினர் குழந்தைகளுக்கு கல்வி கற்பிப்பதற்காக ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகள் நிறுவப்பட்டு வருவதாக குடியரசுத் தலைவர் தெரிவித்தார்.

*__மோடி-காசநோய்__* __(8)__

காசநோய் பாதிப்பு அதிகம் உள்ள மாவட்டங்களில் கவனம் செலுத்தும் வகையில் 100 நாள் சிறப்பு இயக்கம் இன்று தொடங்கப்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். காசநோயை ஒழிக்கும் இந்தியாவின் செயல்பாடுகள் தற்போது வலுவடைந்துள்ளது என்று பிரதமர் தமது சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். காசநோயை ஒழிப்பதற்கு கூட்டு உணர்வுடன் செயல்படுத்தப்படும் இந்த இயக்கம் அதிக பாதிப்புள்ள மாவட்டங்களில் கவனம் செலுத்தும் என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா தெரிவித்துள்ளார்.

*__மோடி__* __(17)__

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் 85 புதிய கேந்திர வித்யாலயா பள்ளிகள் தொடங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார். அனைவரும் பள்ளி கல்வியை பெருவதற்கு வகை செய்யும் அரசின் இம் மாபெரும் திட்டத்தால் ஏராளமான மாணவர்கள் பயனடைவதோடு புதிய வேலை வாய்ப்புகள்

உருவாகும் என்று தமது சமூக ஊடகப் பதிவில் கூறியுள்ளார். 4 ஆம் கட்ட டெல்லி மெட்ரோ திட்ட பணிகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியதற்கும் பாராட்டு தெரிவித்துள்ள பிரதமர், நாட்டில் மேம்பட்ட போக்குவரத்து வசதிகளை வழங்க மத்திய அரசு உறுதி பூண்டிருப்பதாக குறிப்பிட்டார். இதனிடையே, தமிழகத்தில் தஞ்சை, தேனீ மாவட்டங்களில் 2 கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் தொடங்க அனுமதி வழங்கப்பட்டதற்கு தமிழக மக்கள் சார்பாக நன்றி தெரிவிப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் டாக்டர் எல் முருகன் கூறியுள்ளார். மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதானும், மத்திய அமைச்சரவையின் இந்த முடிவுக்கு வரவேற்பு தெரிவித்துள்ளார். மாணவர்களின் கல்வி தேவையை பூர்த்தி செய்யும் நோக்கில் மத்திய அரசு இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

*__கொடிநாள் வாழ்த்து 1__* (17)

ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 7 ஆம் தேதி நாடு முழுவதும் கொடி நாள் அனுசரிக்கப்படுகிறது. ராணுவம், கடற்படை, விமானப் படை வீரர்களுக்கு இதயப் பூர்வமாக மரியாதை செலுத்துவதை இந்த நாள் குறிக்கிறது. இந்த நாளில், பாதுகாப்பு படையினர் மற்றும் முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தாருக்கு தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

கொடிநாள் என்பது நமது துணிச்சலான வீரர்களின் வீரம், உறுதிப்பாடு மற்றும் தியாகங்களை நினைவூட்டுவதாகவும், அவர்களின் அர்ப்பணிப்பு நம்மை பாதுகாப்பாக வைத்துள்ளதாகவும், இந்நாளில், கொடிநாள் நிதியில் அதிக பங்களிப்போம் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தமது சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

முப்படை வீரர்களின் வீரம், துணிச்சல், தியாகத்திற்கு தலை வணங்குவதாக மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். நாட்டின் பாதுகாப்பில் இன்றியமைய தூண்களாக திகழும் முப்படை வீரர்களுக்கு கொடிநாள் நிதி வழங்குவது நம் கடமை என அமைச்சர் தெரிவித்தார். கொடிநாள் நிதியாக நாம் அளிக்கும் நிதி முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தாரின் நலனுக்கு நேரடியாகப் சென்று சேர்கிறது என்றும், இது தேசபக்தியையும் ஒற்றுமை உணர்வையும்

<u>*கொடிநாள் வாழ்த்து*</u> 2 (8)

வளர்த்து பொதுமக்களுக்கும் ராணுவ வீரர்களுக்கும் இடையிலான உறவை வலுப்படுத்துவதாகவும் புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார். மேலும்தேசத்தைப் பாதுகாப்பதில் நம்முடைய படைவீரர்கள் ஆற்றிய சேவைகளுக்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதையாக கருதி கொடி நாள் நிதிக்கு தாராளமான பங்களிப்பை செய்யுமாறு புதுச்சேரி மக்களை கேட்டுக்கொண்டுள்ளார். மக்களிடமிருந்து பெறப்படும் கொடிநாள் நிதி முன்னாள் படை வீரர் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் நலனுக்காக வழங்கப்படுகிறது

<u>*நிர்மலா*</u> (7)

பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனை கூட்டத்தின் 2 ஆவது கட்டமாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் வேளாண் விவசாய சங்கங்களுடன் இன்று புதுடெல்லியில் பேச்சுவார்த்தை மேற்கொண்டார். விவசாயிகளின் நலன் சார்ந்த திட்ட செயலாக்கம் குறித்த வேளாண் நிபுணர்களின் கருத்துகளை அவர் கேட்டறிந்தார். நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சவுத்ரி, நிதித்துறை செயலர் மற்றும் பொருளாதார ஆலோசகர் உள்ளிட்ட உயரதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

**காசநோய் 1(18)**

மத்திய அரசு 2025-க்குள் இந்தியாவில் காசநோய் இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்று இலக்கு நிர்ணயித்துள்ளதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி தெரிவித்துள்ளார். புதுச்சேரி சுகாதாரத்துறை மற்றும் தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம் சார்பில் 100 நாள் காசநோய் விழிப்புணர்வு பிரசார துவக்க விழா கோரிமேடு ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்று நடந்தது. இதில் கலந்து கொண்டு காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து உணவு பெட்டகங்கள் வழங்கி பேசிய அவர், காசநோயை ஒழிக்க, அதுசம்பந்தமான பிரசாரம் அவசியம் என்றார். காசநோய் ஒரு தொற்று நோய் என்றும், அது பரவுவதை தடுக்க வேண்டும் என்றும் கூறினார். காசநோய்க்கு மருந்துடன் ஊட்டச்சத்து மிகுந்த உணவு மிகவும் முக்கியம் என தெரிவித்த முதலமைச்சர் திரு ரங்கசாமி, தற்போது காசநோயாளிகளுக்கு ஊட்டச்சத்து உணவுடன் ரூ.1,000 கொடுப்பதாக கூறினார். மருத்துவ வசதி அதிகரிப்பால் காசநோய் பாதிப்பு குறைந்துள்ளதாக தெரிவித்த அவர், புதுச்சேரியில் வருடத்திற்கு 1,500 பேருக்கு காசநோய் உள்ளது என்றார். புதுச்சேரியில் காசநோய் இல்லாத நிலையை உருவாக்க வேண்டும் என்றும், காசநோய் பரவாமல் தடுப்பதற்கான வழிமுறைகளை நாம் கடைபிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார். கிராமத்தில் இருந்து அரசு மருத்துவமனைக்கு

**காசநோய் 2(10)**

சிகிச்சைக்கு வருவோர் அதிகமாக உள்ளதாகவும், கரிக்கலாம்பாக்கத்தில் உள்ள சமுதாய நலவழி மையத்தை தேர்வு செய்து, 100 படுக்கை வசதி கொண்ட பொது மருத்துவமனையாக மாற்ற உள்ளதாகவும் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், செவிலியர் கல்லூரி மாணவ மாணவிகள் கலந்துகொண்ட காசநோய் விழிப்புணர்வு பேரணியையும் முதலமைச்சர் திரு ரங்கசாமி கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் திரு கே.எஸ்.பி.ரமேஷ், மாவட்ட ஆட்சியர் திரு

குலோத்துங்கன், சுகாதாரத்துறை இயக்குநர் (பொறுப்பு) திரு செவ்வேள், என்ஆர்எச்எம் திட்ட இயக்குநர் திரு கோவிந்தராஜ், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

<u>மத்தியகுழு (11)</u>

புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட புதுச்சேரி,காரைக்கால் மற்றும் ஏனாம் உள்ளிட்ட பகுதிகள் பெஞ்சல் புயலால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதால் இப்பகுதிகளை இயற்கை பேரிடர் பாதிப்பு பகுதிகளாக அறிவித்து புதுச்சேரி அரசின் வருவாய் துறை சிறப்பு செயலரும், மாவட்ட ஆட்சியருமான திரு குலோத்துங்கன் ஆணை வெளியிட்டுள்ளார். இந்நிலையில், புதுச்சேரியில் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த முதலமைச்சர் திரு ரங்கசாமி, புயல் வெள்ள பாதிப்புகளை பார்வையிட மத்திய குழு நாளை புதுச்சேரி வருகை தர உள்ளதாகவும், இரண்டு நாட்கள் தங்கி இருந்து ஆய்வு செய்ய உள்ளனர் என்றும் தெரிவித்தார். மத்திய அரசிடம் 600 கோடி ரூபாய் நிவாரண உதவி கேட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

<u>வானிலை (9)</u>

தென்கிழக்கு வங்க கடலின் மத்திய பகுதியில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி ஒன்று உருவாகி உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. அடுத்த 24 மணி நேரத்தில் மேற்கு மற்றும் வடமேற்கு திசையில் நகர்ந்து வலுவடைந்து வரும் 11 ஆம் தேதி இலங்கை-தமிழக கடற்கரையை நோக்கி நகரக் கூடும் என்றும், இதன் காரணமாக வரும் 10 ஆம் தேதி கடலோர மாவட்டங்கள் மற்றும் தென் தமிழகத்தில் பரவலாக கனமழை பெய்யக் கூடும் என்று தெரிவித்துள்ளது. மேலும், மீனவர்கள் வரும் 11 ஆம் தேதி வரை ஆழ்கடல் பகுதிக்கு செல்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**<u>ஹாக்கி (3)</u>**

**ஆசியக் கோப்பை ஜூனியர் மகளிர் ஹாக்கி போட்டிகள் மஸ்கட்டில் இன்று தொடங்குகிறது. இந்தியா தனது முதல் போட்டியில் நாளை பங்களாதேஷ் அணியை எதிர்கொள்கிறது.**